தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 4 திகதி: 29.11.2025

நேரம்: 02:00 மணித்தியாலங்கள்

ஆசிரியாகள்: திரு திருமதி சாந்தினி விஜயநாதன்
திருமதி உஷா ஜவாகர்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	25	
வினா 2	15	
வினா 3	10	
வினா 4	15	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	25	பக்கம்	3

பின்வரும் பந்தியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒரு சேவலும் ஒரு நாயும் நண்பர்களாக இருந்தன. ஒருநாள் அவை இரண்டும் வெளியே உலாவச் சென்றன. அவை பேசிக் கொண்டே ஒரு காட்டை அடைந்தன. இரவு நேரம் ஆயிற்று. சேவலும் நாயும் காட்டிலேயே தங்குவதற்கு முடிவு செய்தன. சேவல் மரக்கிளையில் உட்கார்ந்து தூங்கியது. நாய் அந்த மரத்தின் அடியில் உறங்கியது.

சேவல் காலையில் எழுந்து கூவியது. அதை ஒரு நரி கேட்டது. அது சேவலைப் பிடித்துச் சாப்பிட ஆசைப்பட்டது. ஆகவே நரி சேவலைத் தேடி வந்தது. அது சேவலைப் பார்த்து, "நீ நன்றாகப் பாடுகிறாயே! என் வீட்டுக்கு வந்து ஓர் இசை நிகழ்ச்சி நடத்த வேண்டும், என்னுடன் வருகிறாயா?" என்று கேட்டது.

நரியின் தந்திரத்தை அறிந்த சேவல் "நரியாரே! என்னை விட என் குரு நன்றாகப் பாடுவார். அவர் மரத்தடியில் படுத்திருக்கிறார். அவரை எழுப்பிக் கூப்பிடுங்கள்|" என்றது.

நரி மரத்தைச் சுற்றி வந்தது. அது நாயைக் கண்டது. அதற்கு நாயைப் பார்த்ததும் பயம் ஏற்பட்டது. அது அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தது.

1 சேவலும் நரியும் எங்கே சென்றன?

---

2 அவை ஏன் காட்டில் தங்கின?

---

3 சேவல் எங்கே தூங்கியது?

---

4 நரியின் ஆசை என்ன?

---

5 நரி ஏன் ஓட்டம் பிடித்தது?

வினா இல	2	புள்ளிகள்	15	பக்கம்	4

பன்மை வாகியமாக எழுதுக.

1 குருவி கூடு கட்டியது.

---

2 சிறுவன் ஓடுகிறான்.

---

3 பறவை ஆகாயத்தில் பறக்கிறது.

---

4 வாத்து நீரில் நீந்துகிறது.

---

5 அது நிலத்தில் விழுந்தது.

வினா இல	3	புள்ளிகள்	10	பக்கம்	4

தொடர்பு படுத்துக.

1	குதிரை	மாணவன்
2	காலம்	நோயாளி
3	வைத்தியர்	கனைக்கும்
4	வகுப்பறை	ஊளையிடும்
5	நரி	இலையுதிர்

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	5

பின்வரும் சொற்களை வைத்து வசனம் எழுதுக.

1. செல்லப் பிராணி

2. விடுமுறை

3. குளிர்காலம்

4. விவசாயக் கண்காட்சி

5. உணவு

வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	6

சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.

1. பூங்காவில் விளையாடுகிறாள் ஊஞ்சல் சிறுமி

2. மின்னுகிறது வானத்தில் மின்னல்

3. பாடம் தங்கை படித்தாள் தமிழ்

4. பால் குடித்தது குழந்தை

5. மெதுவாக அண்ணா ஓடினான்

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	7

பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 10 வசனங்கள் எழுதுக.

1 பாடசாலையில் கொண்டாடிய விழா.

2 நீர் பார்த்த கண்காட்சி.